விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 346 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை (29.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## உயர்தரப் பரீட்சைகள் மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக 2024 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை மேலும் மூன்று நாட்களுக்கு நடத்துவதில்லை எனப் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 4ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜய சுந்தர தெரிவித்துள்ளார். 15

## எதிர்காலத்தில் வெள்ள இடர்களை தடுக்க இப்போதே திட்டமிடுங்கள்

### அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அதிகாரிகள் இப்போதே திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை முன்வைத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்.மாவட்டத்தின் 02

### அநுர ஆட்சி முடிவடைய முன்

# யாழில் இராணுவம் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

### யாழில் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்த



(யாழ்ப்பாணம்)

**தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் நிறைவடையும் முன் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்த தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை நேற்று மேற்கொண்டிருந்த அவர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதன் போது, ஊடகவியலாளர்களால் எழுப்பபட்ட கேள்விகளுக்கு பின்வருமாறு பாதுகாப்புச் செயலாளர் பதில் வழங்கியுள்ளார்.

**கேள்வி** - யாழ்.மாவட்டத் 15

## மாவீரர் குட்டியின் நினைவிடத்தை சேதமாக்கிய விசமிகள்

(யாழ்ப்பாணம்)

நவாலி கிழக்கு, பிரசாத் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள குட்டி என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி பரமேஸ்வரன் என்பவரது 15

### வடக்கு – கிழக்கில்

## வைத்தியசாலை பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம்

(வவுனியா)

வடக்கு- கிழக்கில் பணியாற்றிய சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மற்றும்வைத்தியசாலை 15

## வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீள முடியாது

### மாவீரர் தினம் தொடர்பில் அலி சப்ரி



(கொழும்பு)

வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிருந்து மீளமுடியாதென முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை கடும் மழைக்கு மத்தியிலும் வட, கிழக்கு மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று பெரும் உணர்வெழுச்சி 15

## குளத்தில் தவறிவிழுந்து இளைஞன் சடலமாக மீட்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் குளத்தில் தவறி விழுந்து இளைஞன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த சிரந்த வாசன் குணவர்தன (வயது-31) என்பவரே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 26ஆம் 15

## உரமானிய தாமதத்துக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு 25,000 ரூபாய் உர மானியம் வழங்கப்படுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு விரைவில் 15

## அம்பாறையில் வெள்ளத்தில் கவிழ்ந்த உழவு இயந்திரம்

### 7 பேரின் சடலங்கள் மீட்பு அதிபர் உட்பட 4 பேர் கைது

(அம்பாறை)

அம்பாறை காரைதீவு மாவடிப்பள்ளிப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உழவு வண்டியொன்று அடித்துச் செல்லப்பட்டதையடுத்து காணாமல் போனவர்களில் இதுவரையில் 02

### உலங்குவானூர்தி மூலம்

## நெடுந்தீவிலிருந்து நோயாளர்கள் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து 03 நோயாளர்கள் . உலங்குவானூர்தி மூலம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக நெடுந்தீவிலிருந்து நேற்று 03 நோயாளர்கள் விமானப் படையினரின் ஒத்துழைப்புடன் உலங்குவானூர் தி மூலம்பலாலி விமான 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1968.07.17

உதிர்வு
2016.11.27

யாழ்.ஆதியாமலை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்
சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

அமரர்

## சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

**திதி : 29.11.2024**

எட்டாத் தூரத்திற்கு எமை விட்டுச் சென்று
இன்றுடன் எட்டு ஆண்டுகள் ஆனது
பலரும் காண படுத்துறங்கினாய் – நிரந்தரமாய்
பட்டாலும் பலர் நெஞ்சில் வாழ்கின்றாய்
பாவம் என்ன செய்தாயோ பாதை முடிய
காலனவன் கணக்கெடுப்பில் கண்கொண்டான்
காலம் முடியும் முன் கண்ணிமைத்த உனக்காய்
கடவுளை வேண்டுகிறோம் ஆத்மா சாந்தியடைய

ஆதியாமலை,
உடுப்பிட்டி. (583)

தகவல் :
சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சகோதரி)

# அம்பாறை...

7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நிந்தவூர் பகுதியிலிருந்து சம்மாந்துறை நோக்கிப் பயணித்த உழவு வண்டியொன்று இரு நாட்களுக்கு முன் இரவு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

சம்பவத்தின்போது, அதில் 14 பேர் பயணித்திருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக காரைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், காணாமல் போயிருந்தவர்களில் ஐவர் இரு நாட்களுக்கு முன் மீட்கப்பட்டதுடன், நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 4 சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்தநிலையில் குறித்த உழவு வண்டியின் சாரதியும் அவருடன் பயணித்த அவரது நண்பர் ஒருவரும் நேற்று காலை (28) சடலமாக மீட்கப்பட்டனர்.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, மற்றுமொரு சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரையில் 7 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு சிறுவன் தொடர்ந்தும் தேடப்படுகின்றார்.

இந் நிலையில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் சிக்கிய சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் நிந்தவூர் மதரசா அதிபர், ஆசிரியர் மற்றும் உதவியாளர்கள் இருவரும் நேற்று(28) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26.11.2024 செவ்வாய்க்கிழமை நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மதரசா முடிந்ததும் குறித்த மாணவர்களுக்கு வீட்டுக்குச் செல்ல பேருந்து இல்லாத காரணத்தினால் குறித்த மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் நிர்வாகம் மெத்தனப் போக்குடன் இவ்விடயத்தில் நடந்து கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் மாணவர்கள் பயணம் செய்த குறித்த வீதி ஆபத்தானது என்பதால் உழவு இயந்திரத்தில் குழந்தைகளை ஏற்றிச் செல்ல வேண்டாம் என இராணுவத்தினர் அறிவுறுத்தியிருந்தமை மேலும் தெரியவந்துள்ளது. (ம)

# எதிர்காலத்தில்...


இடர்நிலைமை மற்றும் எதிர்கால இடர்தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சம்பந் துயகொத்தாவ, இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

தற்போதைய இடர்நிலைமைகள் தொடர்பில் பிரதேச செயலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. தமது பிரதேசத்தில் அதிகூடிய பாதிப்பு ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டிய பிரதேச செயலர்கள் எதிர்காலத்தில் அங்கு மேற்கொள்ளவேண்டிய வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் கோரிக்கை விடுத்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்தக் கடினமான நேரத்தில் அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றினர். அதற்கு முதலில் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட அவர் எதிர்காலத்திலும் இவ்வாறு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக இடித்தகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிய ஆளுநர், வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன மக்கள் வீடுகள் அமைக்கும்போது பெற்றுக்கொண்ட அனுமதிக்கு அமைவாக உரிய இடைவெளிகளில் வீடுகளை அமைக்கின்றார்களா என்பதைக் கண்காணிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-33)

# மரண அறிவித்தல்



பிறப்பு
1950 - 11 - 23

இறப்பு
2024 - 11 - 26

## ஜோசெப் பாலேந்திரா (பாலா)

யாழ்ப்பாணத்தை(புகையிரத நிலைய வீதி) பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசெப் பாலேந்திரா(பாலா) அவர்கள் கடந்த 26.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜோசெப் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தனலட்சுமி(மலர்) அவர்களின் அன்புக் கணவரும் ஞானேந்திரம், புவனேந்திரம், ராசேந்திரம், சீதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பிரதீப் அவர்களின் அன்புத் தந்தையாரும் துஷானிக்காவின் மாமனாரும் அஜீஸ், அபினிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.11.2024 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் புனித மிக்கல் தேவாலயத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு புனித மிக்கல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (2050)

தகவல்:
குடும்பத்தினர்
T.P: 077 6100 264

# மரண அறிவித்தல்



பிறப்பு
1938 - 10 - 03

இறப்பு
2024 - 11 - 28

## நவரத்தினம் கனகசபை

முகமாலையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கனகசபை அவர்கள் நேற்று 28.11.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் மகனும் ஆறுமுகம் - நேசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுமந்திரன் மற்றும் லோகேந்திரன் (CTB), கல்பனா, மோகனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்லம்மா, புண்ணியமூர்த்தி மற்றும் செல்வதுரை, பாலகிருஷ்ணன், பாலட்சுமி, பாலச்சந்திரன், சிவபாலன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ராமச்சந்திரன், பாலச்சந்திரன், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சிவகரன், லக்ஷிகா ஆகியோரின் மாமனாரும் ஹர்சரனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.11.2024 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible]சாலை வீதி,
[illegible]ரம். (2629)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால்

# 4,800 ஏக்கர்

# விவசாய நிலங்கள் பாதிப்பு!

(கொழும்பு)

**நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 4, 800 ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய மற்றும் கால்நடை வள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக 2, 000 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம்சுமார்3, 900 ஏக்கருக்கும் அதிக விவசாய நிலப் பரப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

குறித்த விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டால், சுமார் 3,200இற்கும் அதிகமான விவசாயிகளும் பாதிப்பை எதிர் கொள்ள நேரிடும்.

அத்துடன் சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கால் நடை வள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (நி-8)



## சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சையை பிற்போட தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக டிசம்பரில் நடைபெற விருந்த இலங்கை சட்டக் கல்லூரி பொது நுழைவுப் பரீட்சையை பிற்போடுவதற்கு பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட புள்ளியியல் மற்றும் புள்ளியியல் அதிகாரிகளுக்கான வெட்டுப் பரீட்சை ஒரே திகதிகளில் நடத்தப்படாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான இரண்டு பரீட்சைகளும் டிசம்பர் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நிலையில் அது தொடர் பான பரீட்சைகள் அந்தத் திகதிகளில் நடைபெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

### நினைவேந்தலுக்கு இடமளித்திருப்பது

# நல்லிணக்க செயற்பாட்டை வலுவடைய செய்துள்ளது

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் நினைவேந்தலிற்கான உரிமைக்கு இடமளித்திருப்பது நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூகங்களுக்கிடையிலான எதிர்பார்ப்புக்களை வலுவடையச் செய்துள்ளது என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை கடந்த தசாப்தங்களில் பல்வேறு சமூகங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழக்க வழிவகுத்த மோதல்களை சந்தித்துள்ளது. இருப்பினும், தங்களது அன்புக்குரியவர்களை நினைவுகூரும் உரிமையானது பலருக்கும் மறுக்கப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள நல்லிணக்க செயல்முறைகளில் நினைவுகூரும் உரிமைக்கான உத்தரவாதம் அவசியமானதாகும். தற்போதைய புதிய அரசாங்கம் அவ்வாறான நினைவேந்தலுக்கான உரிமைக்கு இடமளித்திருப்பதானது நல்லிணக்கச் செயற்பாட்டின் எதிர்காலம் குறித்து சமூகங்களுக்கிடையிலான எதிர்பார்ப்புக்களை வலுவடையச் செய்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. (நி-8)

### இஸ்ரேல்-லெபனான் போர் நிறுத்தம்

# இலங்கை வரவேற்பு

(கொழும்பு)

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் அண்மையில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் லெபனான் மற்றும் பிராந்தியத்தில் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கு வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (நி-8)

## வழமைக்கு திரும்பியது ஏ-9 வீதி

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து மட்டுப் படுத்தப்பட்ட யாழ்.ஏ-9 வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சி மோட்டை பாலத்திற்கு அருகாமையில் உள்ள வீதியும் ஓமந்தை நகருக்கு அண்மித்த வீதியும் முற்றாக நீரில் மூழ்கியுள்ளதாகப் பொலிஸ் பிரிவு தெரிவித்திருந்தது

இந்நிலையில் ஏ-9 வீதியில் பயணிக்கும் வாகனங்கள் வழமை போன்று வீதியில் பயணிக்க முடியும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (நி-8)

## ரணில்-சஜித் இணைவு தொடர்பில் விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டால் இணைந்து பயணிப்பது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது தொடர்பில் இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பில் அவருடன் பேச்சு நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். இரு அணிகளும் இணைந்திருந்த தரப்புகள் தான்.

எம்முடன் ஐக்கிய தேசியக் கட்சி இணையலாம். ஐ.தே.கவின் தலைமைப்பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டாலும் அது பற்றி பரிசீலிக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான் எமது பயணம். ஐ.தே. கவுடன் இணைந்துள்ள ஏனைய தரப்புகளுடன் அல்ல என்றும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (நி-8)

## வீட்டின் கூரைக்கு மேல் முறிந்து விழுந்த புளியமரம்

(நெளுக்குளம்)

முள்ளியவளைப் பகுதியில் புளியமரம் ஒன்று வீட்டு கூரைக்கு மேல் முறிந்து விழுந்ததால் வீட்டினுடைய மேற்பக்கக் கூரை முற்றாக சேதமடைந்துள்ளது.

காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்துவரும் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை 1 ஆம் வட்டாரம் கிராமத்தில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் அதிகாலை வீட்டின் அருகில் இருந்த பெரிய புளிய மரம் முறிந்து விழுந்துள்ளது.

அதனையடுத்து வீட்டின் மேற்பக்கக் கூரை முற்று முழுதாக சேதம் அடைந்துள்ளது.

குறித்த சம்பவத்தின் போது வீட்டிலிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர் வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது 2025 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள், வேலைகள், வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள் |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற் வகைகள், வாணிஸ் மற்றும் கட்டுமானப் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-09 | சுத்திகரிப்பு திரவங்கள், சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைபொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள், சஞ்சிகைகள். |
| A-14 | கற்கள், மண் வகைகள், தார் |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-16 | அலங்காரப் பொருட்கள், தகரப்பந்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள். |
| A-17 | இரும்புப் பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள். அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-18 | பாதணிகள், மழைக்கவசம், கையுறை, முகக்கவசம். |
| A-19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-20 | அலுமினிய பிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-21 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| A-22 | பிளாஸ்ரிக்/பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள். |
| தொகுதி B | சேவைகள் / வேலைகள் |
| B-01 | மரத்தளபாடங்கள் உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள், மின் மோட்டர்கள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணை பொருட்கள் திருத்தம் |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-08 | கணனி, பிறின்ரர் அதனுடன் இணைந்த பொருட்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B-09 | பதிப்பக வேலை- சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், விளம்பரப் பலகை, லெமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | இரும்பு, கம்பிநெற், பிற்றிங் வகைகள், அலுமினிய பிற்றிங்குகள் தொடர்பான சேவைகள். |
| B-12 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் திருத்தம். |
| B-13 | வளிச் சீராக்கிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும். |
| B-14 | கனரக வாகனங்கள் (JCB, Tipper, Excavator, Bulldozer) வாடகைக்கு பெற்றுக்கொள்ளல். |
| தொகுதி C | வாகன திருத்தமும் சுத்திகரிப்புச் செய்தலும் |
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன சுத்திகரிப்பு/உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரயர், ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி திருத்தம், குடிநீர் தாங்கி திருத்தம். |
| C-04 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம் |
| C-05 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு |
| தொகுதி D | ஒப்பந்த வேலைகள் |
| D-01 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |
| D-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| D-03 | கிணறு / குழாய்க்கிணறு அமைத்தல் |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| தொகுதி E | உணவு வகைகள் |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர் போத்தல்கள் |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள். |

**நிபந்தனைகள்**


1. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குனர்களும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி, 2024 ஆம் ஆண்டு பெறப்பட்ட மாநகர / நகர / பிரதேச சபை வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதி ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. நிர்மாணதாரர்கள் ICTAD புத்தகத்தின முற்பக்கம், பதிவுப் பக்க பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. விண்ணப்ப படிவங்களை எமது தலைமை அலுவலகத்தில் கீழ்வரும் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
   - ➢ தொகுதி A, B, C, E ஆகியவற்றின் தொகுதி ஒன்றுக்கு ரூபா.1000.00 (VAT நீங்கலாக)
   - ➢ தொகுதி D க்கு ரூபா.2,000.00 (VAT நீங்கலாக)

   தொகுதி D இல் D-01, D-02 ஆகியவற்றுக்கு CIDA நிறுவனத்தில பதிவு செய்த C9, C8, C7 நிர்மாணதாரர்களே பதிவு செய்ய முடியும்.
5. அனைத்து விண்ணப்ப படிவங்களையும் ஒரு கடித உறையிலிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குனர்களை பதிவு செய்தல் - 2025" எனக் குறிப்பிட்டு செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்னும் முகவரிக்கு 30.12.2024ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குனர்களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன், இதற்கு புறம்பான வழங்குனர்களிடமிருந்தும் விலை மனுக்களை கோருதல், கொள்வனவு செய்யும் உரிமை, வேறு பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உரிமை சபையைச் சார்ந்தது.
7. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
8. மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021 205 8867) அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,
021 - 2058866

29.11.2024 (C-1677)

# பங்களாதேஷை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி




அன்டிகுவா, நோர்த் சவுண்ட் விவியன் றிச்சட்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 201 ஓட்டங்களால் மேற்கிந் தியத்தீவுகள் மிக இலகுவாக வெற்றிபெற்றது.

கடந்த இரண்டரை வரு டங்களில் மேற்கிந்தியத் தீவுகள் தனது சொந்த மண்ணில் ஈட்டிய முதலாவது டெஸ்ட் வெற்றி இதுவாகும்.

334 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் சகல விக்கெட்களையும் இழந்து 132 ஓட்டங்ளைப் பெற்று தோல்வி அடைந்தது.

இந்த வெற்றியில் ஜஸ்டின் கிறீவ்ஸ் குவித்த கன்னிச் சதம், மிக்கைல் லூயிஸ், அலிக் அத்தானேஸ் ஆகியோர் குவித்த அரைச் சதங்கள், அல்ஸாரி ஜோசப், கெமர் ரோச், ஜேடன் சீல்ஸ் ஆகியோர் பதிவு செய்த 3 விக்கெட் குவியல்கள் என்பன மேற்கிந்தியத் தீவுகளை வெற்றி பெறச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பார்டர்-கவாஸ்கர் தொடருக்கு நடுவில் அவசரமாக நாடு திரும்பும் கம்பீர்




இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீர் , குடும்ப அவசரநிலை காரணமாக பார்டர்-கவாஸ்கர் கிண்ணத்தின் நடுவில் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெர்த்தில் உள்ள ஆப்டஸ் மைதானத்தில் இந்தியாவின் வரலாற்று வெற்றி யின் பின்னர், அடிலெய்டில் டிசம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அவர் மீண்டும் அணியில் இணைந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெர்த்தில் நேற்று முன்தி னம் நடைபெற்று முடிந்த முதல் போட்டியில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1-0 என முன்னிலை பெற்றது.

இதையடுத்து இரண்டு நாள் பிங்க்-பால் சுற்றுப் பயண ஆட்டத்திற்காக இந்திய அணி நேற்று புதன் கிழமை கான்பெர்ரா சென்றது. எனினும், சனிக்கிழமை தொடங்கும் இந்த பயிற்சி ஆட்டத்தில் கவுதம் கம்பீர் அணியில் இடம்பெற மாட்டார் என்பதும் குறிப் பிடத்கத்கது. (6-8)

# புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் இந்தியா

2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக டெஸ்ட் கிரிக்கட்டின் இறுதிப் போட்டிக்கான புள்ளிப்பட்டியலில் மீண்டும் இந்தியா முதலிடம் பெற்றுள்ளது.

ஏற்கனவே சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணியுடனான 3 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்தன் மூலம், இந்தியா புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இந்தநிலையில் கடந்த நான்கு நாட்களாக பேர்த்தில் நடைபெற்ற போர்டர்-கவாஸ்கர் கிண்ண முதல் டெஸ்டில் இந்தியா 295 ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி வெற்றி பெற்றதன் மூலம் மீண்டும் புள்ளிப்பட்டியலில் முதல்நிலை பெற்றுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலிய அணியுடனான எஞ்சியுள்ள நான்கு போட்டிகளில், மூன்றில் வெற்றி பெற்றால், இந்திய அணி, 2025 சர்வதேச கிரிக்கட் சம்மேளன டெஸ்ட் இறுதிப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும்.


அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான போர்டர்-கவாஸ்கர் கிண்ண முதல் போட்டியில் இந்திய அணி, முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்களையும், இரண்டாம் இன்னிங்ஸில் 6 விக்கட்டுக்களின் இழப்புக்கு 487 ஓட்டங்களையும் பெற்றது. அவுஸ்திரேலிய அணி, தமது முதல் இன்னிங்ஸில் 104 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிங்ஸில் 238 ஓட்டங்களையும் பெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற வானிலையால் இதுவரை 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 23 மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**



மழை, வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் 99 ஆயிரத்து 876 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 35 ஆயிரத்து 155 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சீரற்ற வானிலை யால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 17 பேர் காயமடைந்துள்ளது டன் 2 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் இந்த அனர்த்தத்தில் 95 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் 1708 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் சீரற்ற வானிலை யால் பாதிக்கப்பட்ட 89,007 பேர் உறவினர்களது வீடுகள் மற்றும் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-8)

# அடைமழை காரணமாக வவு.29 குளங்கள் உடைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக 29 குளங்கள் உடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திர சேதமான குளங்களை ஆய்வு செய்ய நேற்று நேரில் சென்றிருந்தார். மேலும், 250 குளங்கள் அபாயமாக உள்ளதால், சுற்றுவட்டார மக்கள் கவனமாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அபாயம் உள்ள குளங்களின் கரைகளை பாதுகாக்க பாதுகாப்பு படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
25 கார்த்திகை 2024
"மாற்றம் என்பது பெண்களுக்கெதிரான வன்முறையற்ற சூழலிற்கான மாற்றமாக அமைய வழி வகுப்போம்"
JSAC 16 2024
(சி-1669) யாழ். சமூக செயற்பாட்டு மையம்


## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## மேலதிக முத்திரைத்தீர்வை நிதி

1. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.11.29 ஆம் திகதியிலிருந்து 2024.12.11 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2024.12.12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
9. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2024.12.05 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/ASD/2024/Si.R/04 | அரியாலை சின்னத்தம்பி வீதி புனரமைப்பு. | 2.43 | 56 நாட்கள் | C8 & C7 வீதி | 63 நாட்கள் | 45,000.00 | 2025.03.12 |

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

(1672) 2024.11.29

# இராசிபலன்

29.11.2024
கார்த்திகை 14, வெள்ளிக்கிழமை
திரயோதசி முற்பகல் 9.15 மணிவரை

சுவாதி முற்பகல் 11.20 மணிவரை
சுபநேரம் - 6.13-7.43 மணிவரை
இராகுகாலம் 10.43-12.13 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரட்டாதி, ரேவதி

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டால் ஆர்வம் கூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாட்டால் சிறப்படையும் நாள், உடல்நலன் சீராகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பெற்றோர் மீது பிரியம் கூடும், நம்பிக்கைகள் நடைபெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.




உறவினர் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பணத்தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும்.




எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படும் நாள், பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் சிறப்படையும் நாள், வருமானம் திருப்தி




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**தேவைகளைக் குறைத்துக் கொண்டவன் தெய்வத்தின் அருகில் உள்ளவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து சேவைகளும் வழமைக்கு திரும்பின

## போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனைத்து சேவைகளும் வழமை போல நடைபெறுவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளப்பெருக்கு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சில விடுதிகளுக்குள் நீர் புகுந்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் சாதாரண வைத்திய சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கக் கூடும் என அறிவித்திருந்தோம். இருப்பினும் பெரும்பாலான ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடமைக்கு வந்துள்ளார்கள். ஆகையால் அனைத்து சேவைகளும் வழமை போல நடைபெறுகின்றன.




அனர்த்தம் காரணமாக விபத்துக்களால் பாதிக்கப்பட்ட அல்லது தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இனிமேல் தான் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் எட்டு சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ளன.

அந்த அனைத்து பிரிவுகளிலும் வழமை போல சத்திர சிகிச்சைகள் இடம்பெறுகின்றன.

எனவே மக்கள் வழமை போல சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (நி-8-33)

# குடைசாய்ந்த ஹன்டர்

## ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆலங்குழாய் சனசமூக நிலையம் முன்பாக ஹன்டர் ரக வாகனம் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான ஹன்டர் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-8-110)

# முல்லை அளம்பில் பகுதியில் தீப்பற்றி எரிந்த வாடி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் கடற்கரைப் பகுதியில் மீனவர் ஒருவரின் வாடி கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் தீப்பற்றி பகுதியளவில் முற்றாக எரிந்துள்ளது.

பின்னர் அங்கு நின்ற வர்களினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ விபத்து நடந்த குறித்த வாடியில் மின்இணைப்பு பொருத்தப்பட்டிருந்தது. இந் நிலையில் தகவல் அறிந்த முல்லைத்தீவு மின் பாவனையாளர் சேவை நிலையத்தினர் விரைந்து சென்று மின் துண்டிப்பினை மேற்கொண்டனர். (6-8)

# கைதடி பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பிரதேச சபையில் கைதடிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் கைதடி மேற்கு அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ள மேற்படி வைபவத்தில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் பவளகுமாரன், சிறப்பு விருந்தினர்களாக இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய முதல்வர் தி.அபராஜிதன் மற்றும் யாழ்.மாநகரசபை நூலகர் திருமதி சி.இராணி, கௌரவ விருந்தினர்களாக கைதடி பொதுச் சுகாதாரப் பரி சோதகர் வை.உமாச்சந்திரன் மற்றும் கைதடி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8-30)

# வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்துள்ள கட்டடங்கள்

## இடித்து அகற்றுமாறு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர்நிலைமை தொடர்பில் ஆராயும் இணையவழி கலந்துரையாடல் நேற்று காலை இடம்பெற்றது. இதன்போதே ஆளுநர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடிய பின்னர் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்குரிய ஆயத்தங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதேவேளை நோய் நிலைமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்குரிய ஏற்பாடுகளும் முழுமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரியப்படுத்தினார்.

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் பகலில் துண்டிக் கப்பட்டு இரவில் மாத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. மின்சார விநியோகத்துக்கு தேவையான எரிபொருள் குறிகாட்டுவான் இறங்கு துறையில்இருப்பதாகவும் கடல் பயணதுக்கு ஏதுவான நிலைமை ஏற்பட்டதும் அவற்றை உடனடியாக கடற் படையினரின் உதவியுடன் கொண்டு செல்வதற்குத் தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அதேவேளைதொடர் மழை காரணமாக பெருமளவு பயிர்கள் அழிவடைந்துள்ளதாகவும் வெள்ளம் இன்னமும் வழிந்தோடாமல் இருப்பதால் பயிர் அழிவு தொடர்பில் சரியான மதிப்பீட்டை தற்போது முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (6-8-33)

# கடலரிப்பு காரணமாக தாழிறங்கிய இரு இடங்கள்



(கரணவாய்)

கடலரிப்பு காரணமாக பருத்தித்துறை கடற்கரை வீதியில் இரண்டு இடங்கள் தாழிறங்கி காணப்படுகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக தற்போது நாட்டில் பலத்த கனமழை பெய்து வரும் நிலையில் பருத்தித்துறை கடற்கரை வீதியில் துறைமுகத்துக்கு அருகாமையில் உள்ள பகுதியும் சாக்கோட்டை சவேரியார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு பகுதியும் இவ்வாறு தாழிறங்கி காணப்படுகின்றது.

இந் நிலையில் தொடர்ச்சியாக மழை பெய்யும் நிலையில் தாழிறங்கிய பகுதி அரிப்பு ஏற்பட்டு மேலும் வீதி இடிந்து விழும் அபாயநிலை காணப்படுகின்றது. (6-8-60)

# பருத்தித்துறையில் 1,470 பேர் இடைத்தங்கல் முகாம்களில்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 829 குடும்பங்களைச் சேர்ந்த 2800 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 7 இடைத் தங்கல் முகாம்களில் 296 குடும்பங்களைச் சேர்ந்த 1,470 பேர் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் வடமராட்சி வடக்கு பகுதியில் அதிக பாதிப்புக்கு உள்ளான புனித நகர் பகுதிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று வியாழக்கிழமை காலை திடீர் விஜயம் மேற் கொண்டு கள நிலவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடியிருந்ததுடன் இப் பகுதியில் ஏற் பட்டுள்ள இடர்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு தான் கொண்டு செல்வதாகவும் பாதிக்கப் பட்ட மக்களிடம் தெரிவித்திருந்தார். (6-8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் எச்.ஐ.வி!

## 694 பேர் புதிதாக அடையாளம்!

(கொழும்பு)

**கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் மூலம் கூட்டாளிகளைத் தேடுவது, சரியான பாலியல் கல்வி இல்லாதது போன்ற காரணங்களால் இளைஞர்களிடையே எச்.ஐ.வி தொற்று அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் பரவும் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டில் பதிவான எச்.ஐ.வி நோயாளிகளில் 15 சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என சமூக சுகாதார வைத்திய நிபுணர் விந்த்யா குமாரிபேலி தெரிவித்திருந்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சமூக சுகாதார வைத்திய நிபுணர் விந்த்யா குமாரி பேலி இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு 694 புதிய எச்.ஐ.வி தொற்று நோயாளிகள் நம் நாட்டில் பதிவாகியுள்ளனர்.

சில மருந்துகளுக்கு அடிமையாதல் போன்ற விடயங்கள் இளைஞர்களிடையே புதிய தொற்றுநோய்களின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (876)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


### மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

(கொழும்பு)

கலா வேவா சரணாலயத்தில் சுற்றித் திரிந்த மிகப்பெரிய ஜோடி தந்தங்களைக் கொண்ட தீகதந்து-1 என்ற காட்டு யானை ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

அநுராதபுரம், அடியாகல கிதுருவெவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் முன் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மின்சார வேலியில் சிக்கி யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அடியாகலை வனஜீவராசிகள் அலுவலகமும் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)


**JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING–2025 NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on **Friday, 10 th January 2025 at 11.30am at the Simulation Centre, Teaching Hospital Jaffna** for the following purposes;

1. To receive and consider the annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31 st December 2024 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for year 2025.
4. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

**By order of the committee of management,**
**Honorary Secretary**
**29 th November 2024**

(2624)



**வேலணை பிரதேச சபை - வேலணை**
**வேலணை உப அலுவலக முன்பள்ளிக்கு மாணவர்களை இணைத்தல்-2025**

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வேலணை உப அலுவலக முன்பள்ளிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
முன்பள்ளியில் கல்வி கற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்

- எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- தகைமை பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- இலவச சீருடை வழங்கப்படுகின்றது.
- இலவச சத்துணவுகள் வழங்கப்படும்.
- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கற்றல் வசதிகள்.
- கல்விச் சுற்றுலா வசதிகள்.
- வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றது.

குறித்த முன்பள்ளியில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், வேலணை உப அலுவலகம் மற்றும் முன்பள்ளியில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை பூரணப்படுத்தி 31.12.2024ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்பள்ளியிலோ அல்லது வேலணை உப அலுவலகம் அல்லது தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்க முடியும்.
மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | - 021 221 0180 |
| வேலணை உப அலுவலகம் | - 021 300 3804 |

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**



**சேவைநலன் பாராட்டும்**
மணிவிழா வாழ்த்தும்




**திரு. இராமசாமி சிறீதரன் (அதிபர்)**
(SLPS-I (Sp.Trd, BA, P.G.Dip.in.Ed)

**சேவை விபரம்**

| | |
|---|---|
| + யா/திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலை-சுழிபுரம் | (17.08.1988 - 04.02.1991) |
| + பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை-திருநெல்வேலி | (05.02.1991 - 31.12.1992) |
| + யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் | (01.01.1993 - 15.01.2004) |
| + யா/யாழ்ற்ரன் கல்லூரி காரை நகர் | (16.01.2004-06.05.2004) |
| + யா/காரைநகர் ஊரி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்-அதிபர் | (07.05.2004 - 22.11.2015) |
| + யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்-அதிபர் | (23.11.2015 - 28.11.2024) |

முப்பத்தாறு வருடங்கள் ஆசிரியராக, அதிபராக சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் **திரு.இராமசாமி சிறீதரன்** அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைவதுடன் எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


(2625)

*வாழ்த்துவோர்:-* **ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# போராட்டத்தை கைவிட்ட இம்ரான் கட்சி இயல்பு நிலைக்கு திரும்பியது பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், முன்னாள் பிரதமர் இம்ரான் கட்சியினரின் போராட்டம் திரும்பப் பெறப்பட்டதை அடுத்து, அங்கு நான்கு நாட்களாக நிலவிய பதற்றம் முடிவுக்கு வந்தது.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில், பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையில் பாக்., முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி ஆட்சி நடக்கிறது. இங்கு பிரதமராக இருந்த முன்னாள் கிரிக்கெட் வீரரும், பாக்., - தெஹ்ரீக் - இ - இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கான்மீது, 200 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. இதில், ஒரு சில வழக்குகளில் கைது செய்யப்பட்ட இம்ரான் கான், ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அரசுக்கு எதிராக அவ்வப்போது கருத்துகளை வெளியிட்டு வந்த இம்ரான், நவம்பர் 24 ஆம் திகதி நாடு தழுவிய போராட்டம் நடத்த தன் கட்சியினருக்கு அழைப்பு விடுத்தார். அதன்படி, தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி அவரின் மனைவி புஷ்ரா பீபி தலைமையில் இம்ரான் கட்சி தொண்டர்கள் கடந்த 24 இல் பேரணியாக புறப்பட்டனர்.

அவர்களுக்கு வலுசேர்க்கும் வகையில் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் இருந்து மேலும் பல தொண்டர்கள் இஸ்லாமாபாத் விரைந்தனர். அப்போது, பாதுகாப்பு படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இது வன்முறையாக மாறியதில் இரு பொலிஸார், நான்கு துணை இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக, ஜனாதிபதி பிரதமர் அலுவலகங்கள் உள்ள இஸ்லாமாபாதின் மைய பகுதியான டி - சவுக்கை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பிய அவர்கள், இம்ரான் கானை விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு இம்ரான் மனைவி புஷ்ரா பீபி மற்றும் கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் முதல்வர் அலி அமீன் காந்தாபூர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இதையடுத்து, அங்கு வந்த பாதுகாப்புப் படையினர், போராட்டக்களத்தில் இருந்து அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். அப்போது, இருதரப்பினருக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்தது. இதில், நான்கு பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட 450 பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். இருப்பினும், சம்பவ இடத்தில் இருந்து புஷ்ரா பீபி மற்றும் அலி அமீன் ஆகியோர் தப்பினர். இந்நிலையில், போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதாக தெஹ்ரீக் - இ - இன்சாப் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் சமூக வலைதளப் பதிவில், "அமைதியான முறையில் போராட்டம் நடத்திய நிலையில், அரசு வன்முறையை கட்டவிழ்த்து அடக்குமுறையை மேற்கொண்டது. இதில், எங்கள் கட்சியின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். அரசின் மிருகத்தனத்தால், அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுவதை கருத்தில் வைத்து எங்கள் போராட்டத்தை தற்காலிகமாக திரும்பப் பெறுகிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# நிரந்தர அமை... நம்பிக்கை வெளி...

(ஜெருசலேம்)

**இஸ்ரேலுக்கும், லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையே போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. இதன் மூலம் லெபனானில் நிரந்தர அமைதி திரும்பும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கத்தினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

இதற்கு அடுத்த நாள் முதல் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாவும் தாக்குதலைத் தொடங்கியது. லெபனானின் தெற்கு எல்லைப்பகுதியில் இஸ்ரேல் படைகளுக்கும், ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையே தீவிர சண்டை நடந்து வந்தது.

இந்த நிலையில் இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்தம் நவம்பர் 26 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.


ஆனால் அதேநாளில் கூட லெப்னான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் 42 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு ஹிஸ்புல்லா போராளிகள் தரப்பில் பதில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த நிலையில் தான் போர் நிறுத்த அறிவிப்பு வெளியானது.

அமெரிக்காவின் தலையீட்டின் பேரில் நடந்துள்ள இஸ்ரேல் - ஹிஸ்புல்லா போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு நற்செய்தி என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

காசாவுக்கு எதிரான போரை நிறுத்துவதற்கு இது புதிய அழுத்தத்தை தரும் என்றும் நிரந்தர போர் நிறுத்தத்திற்கான வழியாக அமையும் என்றும் பைடன் தெரிவித்தார்.

அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இஸ்ரேல், ஹிஸ்புல்லா போர் நிறுத்தம்

# உலகின் மிக வயதான மனிதர் காலமானார்



உலகின் மிக வயதான மனிதர் ஜோன் டினிஸ்வுட் தனது 112 ஆவது வயதில் உயிரிழந்தார் என்று கின்னஸ் உலக சாதனைகள் கடந்த செவ்வாயன்று தெரிவித்தன.

இவர் இரண்டு உலகப் போர்கள் மற்றும் இரண்டு உலகளாவிய தொற்று நோய்களிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் மூழ்கிய அதே ஆண்டில் பிறந்த டினிஸ்வுட், வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள சவுத்போர்ட் நகரில் உள்ள தனது பராமரிப்பு இல்லத்தில் தனது கடைசி மூச்சை விடுத்தார்.

டினிஸ்வுட் ஒகஸ்ட் 1912 இல் லிவர்பூலில் பிறந்தார், 1942 இல் திருமணம் செய்து கொண்டார். இரண்டாம் உலகப் போருக்கு மத்தியில் அவர் ரோயல் ஆர்மி பே கார்ப்ஸின் ஒரு பகுதியாக இருந்தார்.

பின்னர் அவர் எண்ணெய் துறையில் கணக்காளராக பணிபுரிந்து 60 வயதில் ஓய்வு பெற்றார்.

அவரது குடும்ப உறுப்பினர்களில் அவரது மகள், நான்கு பேரக்குழந்தைகள் மற்றும் மூன்று கொள்ளு பேரக்குழந்தைகள் இருந்தனர்.


இவரது மனைவி 1986 இல் காலமானார்.

மறைந்த ராணி எலிசபெத், அவருக்கு 100 வயதை எட்டியதிலிருந்து 2022 இல் இறக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் டினிஸ்வுட்க்கு பிறந்தநாள் வாழ்த்து அட்டை அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மைதி திரும்பும்
# ரியிட்ட லெபனான்



அறிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையை இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புக் கொண்டுள்ளது. ஆயினும் உடன் படிக்கையை ஹிஸ்புல்லா மீறி னால், தாக்குதல் நடத்தப்படும் என்றும் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் திருப்பித்தாக்குவோம் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

14 மாத கால போர், முடிவுக்கு வந்ததால், போர் நடந்த தெற்கு லெபனான் பகுதியில் இருந்து முன்னர் வெளியேறியவர்கள், மீண்டும் தங்கள் ஊர்க ளுக்குத் திரும்பி வருகி றார்கள். தெற்கு லெப னானை நோக்கி நூற்றுக் கணக்கான கார்கள் பய ணிக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது. போர் காரண மாக சுமார் 12 லட்சம் பேர், தங்கள் இடங்களை விட்டு வெளியேறியிருந்தனர். போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ள லெபனான் பிரதமர் இதன் மூலம் நாட் டில் அமைதியும் நிலைத் தன்மையும் உருவாகும் என்று நம்பிக்கை தெரிவித் துள்ளார். (நி-8)

# மியன்மார் இராணுவ தளபதிக்கு
## பிடியாணை பிறப்பிக்குமாறு கோரிக்கை

(நெய்பிடோ)

மியன்மார் இராணுவ தளபதி மின் ஆங் ஹ்லைங்கிற்கு பிடி யாணை பிறப்பிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கோரப் பட்டுள்ளது.

ரோஹிங்யா இனத்தவர்க ளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர் கரீம் கான் தெரிவித்துள்ளார்.

அதற்கு போதிய ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு பர்மிய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாகக் கூறப்படும் இனப் படுகொலையை அடுத்து இலட்ச க்கணக்கான ரோஹிங்யா இனத் தவர்கள் மியன்மாரை விட்டு வெளியேறியிருந்தனர்.

அப்போது அங்கு அமை தியின்மை ஏற்பட்டு 1 மாதத் துக்குள் 730 சிறுவர்கள் உட்பட 6,700 ரோஹிங்யா இனத்தவர்கள் கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன் மியன்மார் இராணுவத்தினர், ரோஹி ங்யா இன பெண்கள் மற் றும் சிறுமிகளைத் துஷ் பிரயோகத்துக்கு உட்படுத் தியதாகச் சர்வதேச மன் னிப்பு சபை தெரிவித்துள் ளது.

இந்த நிலையில் மியன் மார் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கையெழுத் திடாத காரணத்தினால் அந்த நாட்டு இராணுவத் தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதில் சாத்திய மற்ற நிலைமை காணப்பட் டது. எனினும் ரோஹிங்யா இனத்தவர்கள் ஏதிலிகளாக தஞ்சமடைந்த பங்களா தேஷ், சர்வதேச குற்றவி யல் நீதிமன்றத்தில் கையெ முத்திட்டுள்ளதன் அடிப்படை யில் மியன்மார் இராணு வத்துக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இந்தநிலையில் மியன் மார் இராணுவ தலைவ ருக்கு எதிரான பிடியாணை யைக் கோருவதற்கான ஆதாரங்கள் உள்ளதாகச் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள் ளார்.

அத்துடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் மியன்மார் இராணுவத் துக்கு எதிராக இனப் படுகொலை விசாரணை யும் இடம்பெற்று வருகின் றன. (நி-8)

# அமெரிக்க கைதிகளை விடுவித்தது சீனா



(பீஜிங்)


சீனாவில் தடுத்து வைக் கப்பட்டிருந்த மூன்று அமெ ரிக்கர்கள் ஜோ பைடனின் நிர்வாகம், கைதிகள் இட மாற்றம் தொடர்பில் பீஜிங் குடன் பேச்சுவார்த்தை நடத் திய பின்னர் விடுவிக்கப்பட் டனர்.

மார்க் ஸ்விடன், கை லி மற்றும் ஜோன் லியுங் ஆகிய அமெரிக்கக் கைதி களே விடுவிக்கப்பட்டுள்ளது டன், பல ஆண்டுகளுக்கு பின்னர் அவர்கள் மீண்டும் அவர்களது குடும்பத்தின ருடன் இணைவார்கள் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் (என்எஸ்சி) செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பீஜிங் கைதிகள் பரிமாற் றத்தின் ஓர் அங்கமாக இந்த விடுவிப்பு வந்துள் ளது.

பல மாதங்களாக நடந்து வரும் இந்த பரிமாற்றத்தில் அமெரிக்கக் காவலில் உள்ள ஒரு சீனப் பிரஜையை விடு விப்பதும் அடங்கும். (நி-8)

# இந்துக் கோயில்கள் மீது
## வன்முறைக்கும்பல் தாக்குதல்



(இஸ்லாமாபாத்)

பங்களாதேஷில் உள்ள சட்டோகிராமில் இந்து கோவில்கள் மீது, வன் முறை கும்பல் குறிவைத்து தாக்குதல் நடத்துவதால் பதற்றம் நீடிக்கிறது.

பங்களாதேஷில் "சம் மிலிதா சனாதனி ஜோதே" என்ற இந்து அமைப்பின் சின்மாய் கிருஷ்ண தாஸ் பிரம்மச்சாரி கைது செய்யப் பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் சிறுபான்மை இந்துக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சின் மாய் கிருஷ்ண தாஸ், ஏற் கனவே இஸ்கான் தலை வராக இருந்ததால், இஸ் கான் உள்ளிட்ட பல் வேறு இந்து அமைப்புகள், தங்களது கண்டனங் களைத் தெரிவித்து வருகின் றன.

இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் சட்டோ கிராமில் பிரங்கி பஜாரில் உள்ள லோகோநாத் கோவில், மான்சா மாதா கோவில் மற்றும் ஹசாரி லேனில் உள்ள காளி மாதா கோவில் ஆகிய மூன்று கோவில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்துஇஸ்கான் செய்தித் தொடர்பாளர் ராதா ரம் தாஸ், இந்துக் கோவில் மீது கும்பல் தாக்குதல் நடத் தியதாகக் கூறப்படும் வீடி யோவை பகிர்ந்து,சமூக வலைதளத்தில் பதிவிட்டுள் ளதாவது: "பங்களாதேஷில் இந்துக்கள் மற்றும் இந்து வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் எப்போது நிறுத் தப்படும்" என்று கேள்வி எழுப்பி உள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள்

# அதிகளவில் உயிர்மாய்ப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் அதிகளவில் உயிரை மாய்த்துக் கொள்பவர்கள் ஐஸ் மற்றும் மெத்தம் பெட்டமைன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

கடந்த மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் 10 பேர் உயிரை மாய்த்துக் கொண்டு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 16 மற்றும் 65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 4 பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் பயன்பாடானது உடல் ஆற்றலை அதிகரிப்பதுடன்,

குழப்பம், பதற்றம், விரைவான இதயத் துடிப்பு உள்ளிட்ட உடல் நலப்பாதிப்புகளை ஏற்படுத்துவதாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு உள்ளிட்ட உடல் நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றமையால் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (நி-8)

# அஸ்வெசும திட்டத்திற்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

(கொழும்பு)

அஸ்வெசும திட்டத்திற்காக விண்ணப்பிப்பதற்கு வழுங்கப்பட்ட கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்திற்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி வரை மாத்திரமே கால அவகாசம் வழுங்கப்பட்டிருந்தது.

எனினும் இதற்கான இறுதி திகதி தற்போது எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்வெசும நிவாரணத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழுங்கும் நோக்கில் இதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 200 | 150 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 200 | 800 |
| தக்காளி | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 250 | 220 | 160 |
| கோவா | 200 | 220 | 200 | 300 |
| கரட் | 220 | 300 | 200 | 300 |
| பூசணி | 140 | 120 | 100 | 200 |
| புடோல் | 160 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 380 | 300 | 350 | 400 |
| பாகற்காய் | 550 | 900 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 160 | 200 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 | 600 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 300 | 180 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 1200 | 1000 | 600 |
| போஞ்சி | 450 | 550 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 150 | 380 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 100 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 1200 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- |
| முள்ளங்கி | 120 | 120 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 30 | 60 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 150 | 200 |

# இன்று ஒரு தகவல் 273



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## மாமியார்கள் கவனிக்கவும்!

ஒரு ஊரில் ஒரு அம்மா இருந்தார். அந்த அம்மாவிற்கு ஒரு பிள்ளை. அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்ததும் மருமகள் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அப்பாடா! என் கடமை முடிந்தது. இனிமேல் அப்பாடா என்று எங்கேயாவது ஒரு மூலையிலே படுத்துக்கிடக்கலாம் என்று நினைத்தார் அந்த அம்மா. ஆனால் நினைக்கின்றபடி எங்கே நடக்கின்றது? அதன்பின் தான் பிரச்சினையே ஆரம்பமானது.

மருமகள் குணம் சரியில்லை. ஒரு மாதிரி. அந்த பெண் வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாக மாமியாரைப் பார்த்து அது தான் நான் தான் இங்கு வந்துவிட்டேன் தானே.

இனிமேல் உங்களுக்கு என்ன இங்கே வேலை? புறப்பட வேண்டியது தானே காசி இராமேஸ்வரம் என்று எங்கேயாவது என்றார். மாமியார் கொஞ்சம் யோசித்தார். இதோ பாரும்மா நீ இப்படி சொல்வதற்கு முன்னாலே வீட்டை விட்டுப் புறப்பட வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்து விட்டேன்.

வீட்டை மட்டும் இல்லை இந்த உலகத்தையே விட்டு போவதற்கும் தயாராக இருக்கின்றேன். ஆனால் ஒரு விடயத்திற்காக என் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டிருக்கின்றேன் என்றார்.

என்ன விடயம் என்று கேட்டார் மருமகள். வேறு ஒன்றும் இல்லை. என் மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன். ஒரு பேரப்பிள்ளை பிறந்து அதை என் கண்ணாலே பார்த்து விட்டேன் என்றால் நான் எங்கே வேண்டும் என்றாலும் போவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்றார் அந்த மாமியார்.

மாமியார் இப்படி சொல்வதிலேயும் நியாயம் இருப்பதாகப்பட்டது அந்த பெண்ணிற்கு. சரி அப்படியே இருந்து பார்த்துவிட்டுப் போகலாம் என்று அனுமதி கொடுத்தார்.

சிறிது காலத்திலேயே ஒரு பேரன் பிறந்தான். இந்த அம்மாவும் பேரனைக் கண்ணாலே பார்த்தது விட்டார். சரி பேரனைப் பார்த்து விட்டீர்கள் தானே இனிமேல் புறப்பட வேண்டியது தானே என்றார் மருமகள்.

மாமியார் யோசித்தார். நீ சொல்வதும் சரி தானம்மா .அதிலே ஒன்றும் தப்பில்லை. என்னுடைய பேரன் உங்களை அம்மா அப்பா என்று கூப்பிடுவதை என் காது குளிர கேட்டுவிட்டுப் போகின்றேன் என்றார்.

சரி அந்த ஆசையும் நிறைவேறட்டும் என்று காத்துக்கொண்டிருந்தார். பேரன் வளர்ந்தான் நடந்தான். பாடசாலைக்குப் போனான். பெரியவனானான்.மருமகள் மறுபடியும் மாமியாரை விரட்ட ஆரம்பித்தார்.

இன்னும் புறப்படவில்லையா? என்று. இதோ பாரும்மா இதுவரைக்கும் இருந்துவிட்டேன். பேரனுடைய திருமணத்தையும் கண்ணாலே பார்த் தால் தான் இந்தக் கட்டைக்கு நெஞ்சு வேகும் போல இருக்கின்றது என்றார்.

இதுவும் நியாயமான ஆசை போல பட்டது அந்தப் பெண்ணிற்கு . சரி என்று ஒத்துக்கொண்டார்.

பேரன் திருமணம் முடிந்தது. இனிமேல் ஒரு நொடி கூட இங்கே இருக்கக் கூடாது புறப்படுங்கள் என்று மாமியாரை விரட்டினார் அந்தப் பெண். இப்போது அந்த மாமியார் தன்னுடைய மருமகளை நிமிர்ந்து பார்த்தார்.

இதோ கிளம்பிவிட்டேன். என் மூட்டை முடிச்செல்லாம் கட்டிக்கொண்டு புறப்படுகின்றேன். அப்படியே நீயும் உன் துணிகளை மூட்டை கட்டிக் கொண்டு புறப்படு சேர்ந்து போகலாம் என்றார்.

அந்தப் பெண் முழித்தார். முழிக்காதே உனக்கும் ஒரு மருமகள் வந்து விட்டால் நீயும் ஒரு மாமியார் தானே. உனக்கு இனிமேல் இங்கே என்ன வேலை புறப்படு என்றார்.

அப்போது தான் அந்தப் பெண் சிந்திக்க ஆரம்பித்தார். தன்னுடைய தவறு புரிந்தது.

இந்தத் தகவலை கேட்டுக் கொண்டிருக்கின்ற மருமகள்கள் எல்லாம் அதைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் மாமியார்கள் சார்பாக.


சிறிது நாட்களுக்கு முன்பு ஒரு பெண்ணைப் பார்த்து பேசுகின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு திருமண வீட்டிலே. அந்தப் பெண் என்னிடம் சார் எனக்கு திருமணம் ஆகி 15 வருடம் தான் ஆகிறது. நான் மாமியாரிடம் சண்டை போட்டதே இல்லை என்றார். மிகவும் அடக்கமாக.

அது எப்படியம்மா சாத்தியமானது என்று கேட்டேன். எனக்கு திருமணமாகி 15 வருடம் ஆகிவிட்டது. ஆனால் என் மாமியார் இறந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு கருதி

# வட்டுவாகல் பாலத்தில் பயணிக்கத் தடை



(நெளுக்குளம்)

போக்குவரத்து பாதுகாப்புக் கருதி வட்டு வாகல் பாலத்தினால் பயணிக்க தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள் ளதாகவும் பொதுமக்கள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் முல் லைத்தீவு மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத் தில் ஆங்காங்கே வெள்ள நீர் பாலத் தினை மேவிய நிலையில் இருப்ப தனால் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியம் அதிகமாக உள் ளது.

மேலும் தொடர் கனமழை காரணமாக மீண்டும் வட்டு வாகல் பாலம் ஆங்காங்கே பாலத்தினை குறுக் கறுத்து பாய்ந்த வண்ணம் இருக்கின் றமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# மன்னாரில் 9,156 பேர் இடைத்தங்கு முகாம்களில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச் சியாக பெய்து வந்த கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று முன்தினம் மாலை 6 மணி வரை 16 ஆயிரத்து 774 குடும்பங்க ளைச் சேர்ந்த 61 ஆயிரத்து 674 பேர் பாதிக் கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தில் 73 தற்காலிக பாதுகாப்பு நிலைய்ங்கள் அமைக்கப்பட் டுள்ளது. குறித்த நிலையங்களில் 2 ஆயிரத்து 845 குடும்பங்க ளைச் சேர்ந்த 9 ஆயிரத்து 156 பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை மழை வெள் ளம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டும், நலன்புரி நிலையங்களுக்கு செல்லாது வீடுகளிலும் உறவினர்களின் வீடுக ளிலும் உள்ள மக்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைக்க வில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்த னர். (6-8-285)

## தேசிய ரீதியில் முதலிடம்

# வவு. மாணவன் கண்டுபிடித்த வாக்களிப்பு இயந்திரம்

(குருமன்காடு)



அகில இலங்கை ரீதியில் இடம்பெறும் ரொபோட்டிக் தொடர் பான புத்தாக்கப் போட் டியினை முன்னிட்டு வவுனியா விபுலா னந்தா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் 14 வயது டைய சி.கபிலாஸ் என்ற மாணவன் இலத்திரனியல் முறை யில் வாக்களிக்கும் இயந் திரம் ஒன்றை கண்டு பிடித்து சாதனை படைத்துள்ளார்.

வவுனியா மாவட்ட புத்தாக்க போட் டியில் முதலாம் இடத்தை பெற்றுள்ள துடன், மாகாணத் தில் இரண்டாம் இடத்தையும், தேசிய ரீதியில் முதலாம் இடத் தையும் குறித்த கண்டுபிடிப்பு பெற்றுள்ளது.


இதனையடுத்து குறித்த மாணவ னுக்கு பல்வேறு பகுதிகளிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள் ளது.

குறித்த இயந்திரத்தில் வாக் காளர்கள் தமது கடவுச் சொல்லை (வாக்கு சீட்டு இலக் கம்) செலுத்தி தமது கைவிரல் அடையாளத்தை பதிவு செய்து விரும்பிய கட்சிக்கு வாக்களிக்க கூடியதாக அது வடிவமைக்கப் பட்டுள்ளதுடன், மொத்த வாக் குளை அறியும் வசதியும் காணப்படுகின்றது.

போலியான முறையில் மீண்டும் ஒருவர் வாக்குகளை அளிக்க முயன் றால் அதனை அந்த இயந்திரம் நிரா கரித்து குறித்த நபரை வெளிப்படுத் தும் வகையில் தொழில் நுட் பத்தை பயன் படுத்தி இவ் இயந்திரம் வடிவமைக்கப்பட் டுள்ளது. இது குறித்து மாணவன் கருத்து தெரிவிக்கையில், தேர்தல் செலவுகளை குறைக்க வேண்டும் என திட்டமிட் டுள்ள ஜனாதிபதி எனது இக் கண்டு பிடிப்பை பார்வையிட்டு, செலவு குறைந்த முறையில் வாக்களிக்க கூடியதாக இவ்வாறான இயந்திரத்தை மெருகூட்டி பயன்படுத்த தனக்கு உதவ வேண்டும் எனவும் அந்த மாணவன் கோரிக்கை விடுத் துள் ளமை குறிப்பிடத்தக் கது. (6-8-250)

# இளங்கோபுரம் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த சிறுத்தை

## வனஇலாகா அதிகாரிகளால் மீட்பு



(கண்டாவளை)

வீடொன்றுக்குள் உள் நுழைந்த சிறுத்தைப் புலியினை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டெடுத்து வனப்பகுதியில் விடுவித்துள்ளனர்.

முல்லைத்தீவு விசுவமடு இளங் கோபுரம் பகுதியில் ஆட்களற்ற வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் காலை சிறுத்தை புலி ஒன்றின் நடமாட்டத்தை அவதா னித்த பிரதேச வாசிகள் உரிய அதிகாரிகளுக்கு தக வல் வழங்கியிருந் தனர். இதனையடுத்து கிளி நொச்சியிலுள்ள வனஜீவ ராசிகள் சங்க உத்தி யோ கத்தர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நீண்ட போராட்டத்தின் மத்தி யில் சிறுத்தை புலியினை பாதுகாப்பாக மீட்டு சிகிச்சை வழங்கியதுடன் அதனை பாதுகாப்பாக வனப் பகுதியில் விடுவிக்கும் நடவடிக்கையை முன் னெடுத்து இருந்தனர். (6-8-299-315)

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் **2025.01.03** ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. நீதிமன்றங்களில் வழக்குகளைக் கையாளுதல் தொடர்பாக குறைந்த பட்சம் 05 ஆண்டுகள் முனைப்பான சேவைக்காலத்தைக் கொண்ட முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 150,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் முலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 13.12.2024**

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**29.11.2024**

(சி-1674)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 643





பலமுறை உதவிதான் புரிந்திருக்கிறான். அவனுடன் சேர்ந்து பிரயாணம் செய்தால், ஏதாவது உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பான். பிரயாணத்தில் அலுப்புத் தட்டாமல் இருக்கும். இனி எங்கே வந்து அவன் நம்முடன் சேர்ந்து கொள்ள முடியும்? அவனுக்காக எத்தனை நேரந் தான் இந்தக் குதிரையை இழுத்துப் பிடித்து மெல்லச் செலுத்திக் கொண்டு போவது?"

இது நடக்கக்கூடிய காரியமா? அந்தப் பிரம்மராயர் தமது மனத்தில் என்னதான் உண்மையில் எண்ணியிருக்கிறாரோ தெரியாது! அரசிளங்குமரியிடமிருந்து என்னைப் பிரித்து விடுவதே அவருடைய நோக்கமாயிருக்கலாம் அல்லவா.

ஆழ்வார்க்கடியான் வந்து சேர்ந்து கொள்வான் என்று இருவரும் சொன்னார்கள்! அவனையும் இது வரையில் காணோம்! அந்த வீர வைஷ்ணவன் எப்பேர்ப்பட்ட வனாயிருந்தாலும், இதுவரையில் எனக்கு ஒரு கெடுதலும் செய்ததில்லை.

"ஆகா! அதோ கும்பலாயிருக்கும் மரங்கள்! நதி வெள்ளத்தில் முதலைகளைப் போல் கிடக்கும் அந்த வேர்கள்! இங்கேதான் பொம்மை முதலைமீது வேல் எறிந்த படலம் நடைபெற்றது.

வாரிணியும் தாரகையும், செந்திருவும் மந்தாகினியும் நம்முடைய வீரச்செயலைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தது இவ்விடத்தில் தான்! அரசிளங்குமரி நமக்குப் பரிந்து அந்தப் பெண்களை அதட்டியதும் இதே இடத்தில்தான்! சற்று இங்கே நின்று பார்க்கலாம்."

வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து இறங்கி நதிக்கரையில் ஓரமாகச் சென்று நின்றான். மரத்தின் வேர்களைச் சுற்றிச் சுற்றிச் சுழலிட்டுக் கொண்டு ஓடிய தெளிந்த நீர்ப்பிரவாகத்தைச் சிறிதுநேரம் உற்று பார்த்துக் கொண்டிருந்தான். ஆகா! அந்தச் சுழலில் ஒரு முகம் தெரிகிறது! அது யாருடைய முகம்? சொல்லவேண்டுமா? அரசிளங்குமரி குந்தவைப் பிராட்டியின் இன்பப் பொன்முகந்தான்!

"கண்டேன் கண்டேன் கண்டேன் கண்ணுக்கினியன கண்டேன்!" என்று பாடிய குரலைக்கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தான். உன்னதமான மரத்தின் உச்சாணிக் கிளை ஒன்றில் ஆழ்வார்க்கடியான் அமர்ந்திருப்பது தெரிந்தது!

ஓகோ! வீரவைஷ்ணவரே! நான் உம்முடைய திருக்கண்களுக்கு அவ்வளவு இனியவனாக இருக்கிறேனா! நான் உம்மைச் சிறிது நன்றாகப் பார்க்கிறேன். கீழே இறங்கி வருக! என்று சொன்னான் வந்தியத்தேவன்.

வீரவைஷ்ணவன் - மரத்திலிருந்து இறங்கிய வண்ணம், "நான் உன்னை சொல்லவில்லை, அப்பனே! உடையில் வாளும், கையில் வேலும் ஏந்திய நீ என் கண்ணுக்குப் பயங்கரமாகவல்லவோ புலப்படுகிறாய்?" என்றான்.

பிறகு, யாரைப் பற்றிச் சொன்னீர் வைஷ்ணவரே? முழு முதற் கடவுளாகிய திருமால் வாமனாவதாரம் எடுத்து வானத்தை அளப்பதற்காக ஒரு பாதத்தைத் தூக்கிய போது, உங்கள் சிவபெருமானுடைய கண்களுக்கு...."


வைஷ்ணவரே! நிறுத்தும்! இம்மாதிரியெல்லாம் சிவனைத் தாழ்த்திக் கூறுவதை நிறுத்தி விடும். இல்லாவிடில் பெரிய அபாயத்துக்கு உள்ளாவீர்!"என்ன அபாயம், அப்பனே! முதலையைக் கொன்று யானையைக் காத்த பெருமானின் சக்கரம் இருக்கும்போது என்னை யார் என்ன செய்ய முடியும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்



(நேற்றைய தொடர்ச்சி)

அடுத்த நாள் முயல் நரிக்காக நண்டுகளை கொண்டு வந்து கொடுத்து. அப்போது அங்கிருந்த கரடியிடம் பார்த்தாயா கரடியாரே! இதே போல நாளைக்கு நீர் தான் நண்டுகளை பிடித்து வந்து தர வேண்டும்.

சிங்கத்தின் கட்டளை தெரியுமல்லவா என் பேச்சை கேட்க வேண்டும் என்றது. கரடியும் தலையை ஆட்டியபடியே அங்கிருந்து சென்றது.

மறு நாள் கரடி நண்டுகளை கொண்டு வர வில்லை.

நரிக்கு பசியால் கண் கள் இருண்டு காதுகள் அடைக்க ஆரம்பித் தது. வேக வேகமாக சிங்கத்திடம் சென்றது. சிங்கராஜா காட்டில் சட்டம் ஒழுங்கு மேலும் கெட்டு விட்டது. முயல் போலவே இன்று க்ரடி சட்டத்தை மதிக்க வில்லை என்று நரி முறையிட்டது.

கரடியை அழைத்து வர சிங்கம் ஆளனுப்பியது. சிங்கத்தின் அருகில் கரடி வந்து நின்றது. அதன் கைகளில் சில நண்டுகள் இருந்தன. "இது என்ன கரடியாரே?" என்று சிங்கம் கேட்டது. சிங்க ராஜா இந்த நண்டுகள் நரிக்கான உணவு.

தினமும் யாராவது அதற்கு கொண்டு வந்து தர வேண்டுமாம். இது காட்டின் சட்டத்தில் எத்தனையாவது விதி" என்று கரடி கேட்டது.

நரியின் சூழ்ச்சி சிங்கத்துக்கு புரிந்து விட்டது. என்ன நரியாரே, உனக்கு தினமும் யாராவது உணவு கொண்டு வந்து தர வேண்டுமா? நேற்று முயல்,இன்று கரடி. நாளைக்கு யார் யானையா?" என்று சிங்கம் கேட்டது.

நரி செய்வதறியாது விழித்தபடி நின்றது.

"நீயே எனக்கான உணவை தினமும் கொண்டு வந்து தர வேண்டும் மற்றவர்களுக்கு பொல்லாங்கு (தீங்கு) செய்த உனக்கு இதுதான் தண் டனை" என்று சிங்கம் தீர்ப்பளித்தது.

மற்றவர்க்கு தீங்கு செய்ய நினைத்து தனக்கே தீங்கு வந்து விட்டதை எண்ணி நரி வருந்தியபடியே சென்றது.

அதனால் நாம் யாருக்கும் தீமை செய்யாமல் வாழ வேண்டும்.கரடியும் தலையை ஆட்டியபடியே அங்கிருந்து சென்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான நடத்தை என்பது கருணை நிறைந்த தன்மையாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாமே நமக்கு பகையும் துன்பமும்

எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை என்பர் நம் நாயன்மார்கள். ஆனால் எந்நாளும் துன்பமேயன்றி இன்பமில்லை என்பது நம் நிலையாயிற்று.

ஆம், கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் வெள்ளப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலை ஏற்படுவதற்குக் கடும் மழையே காரணம் என்று எவரும் கூறி விடக்கூடாது.

ஏனெனில் மாரிகாலம் என்பது பெரு மழைக்குரிய காலம். அது இயற்கையின் ஒழுங்கமைப்பு.

தவிர, நம் முன்னோர்களுடைய காலங்களிலும் இதுபோன்ற மழை வீழ்ச்சி நடந்துள்ளது.

ஆனால் அவர்கள் இப்படியானதொரு வெள்ள அனர்த்தத்துக்கு முகம்கொடுக்கவில்லை.

பெய்கின்ற மழை – பெருகுகின்ற வெள்ளம், நீரோட்டத்தின் வழியே ஓடி உரிய குளங்களைச் சென்றடையும். குளங்கள் நிறையும் போது, மேலதிக மழை வெள்ளம் கடலோடு சங்கமிக்கும். இது இயல்பாக நடந்தாகும்.

ஆனால் என்று மட்டை வேலிகள் மதில் சுவர்களாயினவோ! என்று குளங்கள் நிரவப்பட்டு கட்டடங்கள் ஆக்கிரமித்தனவோ! என்று வாய்க்கால்களும் நீரோட்டங்களும் தடுக்கப்பட்டனவோ! அன்று தொட்ட நிட்டூரம்தான் இது.

ஆம், மழை வெள்ளம் தேங்கி நின்று; வீடுகளுக்குள் புகுந்து மக்களின் இயல்பு வாழ்க்கையைத் துன்பமாக்கி விடுகிறது.

உதாரணத்துக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயமும் அதன் சுற்றாடலும் எந்தக் காலத்திலும் இப்படியொரு வெள்ள அனர்த்தத்தை சந்திக்கவில்லை.

என்று நல்லூர் பிராமணக்கட்டுக்குளம் புனரமைக்கப்படாமல் விடப்பட்டதோ, அந்தக் குளம் நிறைந்து மேலதிக வெள்ளம் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் குளம் – ஆரிய குளம் என்று சென்றேகும் வழித்தடங்கள் அடைபட்டு போயினவோ, அன்றுதான் நல்லூர்ச் சுற்றாடல் வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கும் பரிதாபத்துக்கு ஆளானது.

இவ்விதமே வீடுகளை தாழ்வாக்கி உயர்ந்து நிற்கும் வீதிகள், வெள்ளத்துக்கு அணைகட்டியதுபோல் நீண்டு செல்லும் புகையிரதப் பாதைகள்.

வெள்ள நீர் வழிந்தோடுவதற்கு வழி விடாத சுற்றுமதில்கள் என எல்லாமும் சேர்ந்து எக்காலத்திலும் இல்லாத வெள்ள அனர்த்தத்தை நம் மண்ணில் ஏற்படுத்தியுள்ளன.

ஆக, இனியேனும் வெள்ளம் வழிந்தோடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

சுற்றுமதில் கட்டும்போது அடுத்த வளவு வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்ப வழி விடுக! என உள்ளூராட்சி சபைகள் நிபந்தனை விதிக்க வேண்டும்.

ஆக்கிரமிக்கப்பட்ட வடிகால்களை மீட்டெடுக்க வேண்டும். இதைச் செய்வதன் மூலம் எதிர்காலத்திலேனும் வெள்ள அனர்த்தத்தைத் தடுக்கமுடியும்.

இல்லாவிடில் நாமே நமக்குப் பகையும் நாமே நமக்குத் துன்பமும் என்றாகிவிடும்.

# வட்டுவாகலில் அடித்து செல்லப்பட்ட மோ.சைக்கிள்

### தெய்வாதீனமாக உயிர் தப்பிய நபர்

வட்டுவாகல் பாலத்தினூடாக போக்குவரத்து தடையை மீறிச் சென்ற நபரின் மோட்டார் சைக்கிள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளே வட்டுவாகல் பாலத்தைக் கடக்க முற்பட்டபோதே வெள்ள நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பாலத்தினூடாக செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என கடற்படையினர் கூறிய போதும் அதனை பொருட்படுத்தாது குறித்த நபர் சென்று வட்டுவாகல் பாலத்தினை கடக்க முற்பட்டுள்ளார்.

அப்போது குறித்த பாலத்தினை மேவி நீர்வரத்து அதிகமாக காணப்பட்டதால் மோட்டார் சைக்கிள் இழுத்துச் சென்றுள்ளது.

அப்போது குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே தண்ணீருக்குள் விழுந்ததால் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர். இருப்பினும் மோட்டார் சைக்கிளினை வெள்ளம் இழுத்து சென்றுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் போக்குவரத்து தற்காலிகமாகப் பாதுகாப்பு கருதி தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### 07 ஈரானிய பிரஜைகளுக்கு

# கொழும்பு நீதிமன்றால் ஆயுள் தண்டனை

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு கொழும்பு மட்டக்குளிக் கரையோரப் பகுதியில் 425 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளை கடத்திய குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக் கொண்ட 07 ஈரானிய பிரஜைகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது

பிரதிவாதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவிட இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்

2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி, கொழும்பு மட்டக்குளிக்கு அருகிலுள்ள கடற்கரையில் 425 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு செல்லும் போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, சட்டமா அதிபர், பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் உயர் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, பிரதிவாதிகள் தமது சட்டத்தரணி ஊடாக இது தொடர்பான குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாக நீதிமன்றில் அறிவித்த நிலையில் இவ்வாறு தீர்ப்பை வழங்கப்பட்டுள்ளது. (ம)

# அர்ச்சுனா எம்.பியின் பிடியாணை இரத்து

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனது சட்டத்தரணி ஊடாக நேற்று நீதிமன்றில் முன்னிலையான நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - பேஸ்லைன் வீதியில் அர்ச்சுனா, கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி இன்னுமொரு காருடன் மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், வாகன சாரதியைத் தாக்கிக் கடுமையாகக் காயப்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகத்திற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்தும் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாவதைத் தவிர்த்து வருவதனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் அர்ச்சுனாவிற்குப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ம)

### வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை 01 - 30, 2024

**"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடி கொள்ளச் செய்யும் ஒன்றாகும்"**

வாஷிங்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# குற்றப்புலனாய்வு திணைக்களத்தில்

### முன்னிலையான பந்துல

தனது வாழ்க்கையில் முதல் முறையாக அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைக்காக வருகை தந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சந்தேகத்திற்குரிய மருந்துப் பொருள் கொள்வனவு தொடர்பான விசாரணைக்கு நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை தீர்மானங்களுக்கு எதிராக தற்போது விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ம)

# தெதுரு ஓயா நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் நிக்கவெரட்டிய, சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, பிங்கிரிய, வாரியபொல மற்றும் கொபேகனே ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மோசமான வானிலை காரணமாக வடமாகாணத்தில் 64 ஆயிரம் ஹெக்டேயர் நெற்செய்கை நாசமாகியுள்ளது.

அதேநேரம் மன்னார் மாவட்டத்தில் 23 ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான நெற்செய்கையும் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# வேலை பெற்றுத் தருவதாக மோசடி செய்த பெண் கைது

துபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்து இரண்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.


கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சேர்க்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான பெண் வத்தளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண் துபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி அம்பாறை, பதுளை மற்றும் பிபில உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் 37 நபர்களிடமிருந்து 02 கோடியே 12 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், சந்தேக நபரான பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் தத்தளிக்கும் வடக்கு






யாழ்ப்பாணம்







முல்லைத்தீவு





வவுனியா





கொடிகாமம்



கிளிநொச்சி



வன்னேரிக்குளம்



இணுவில் கந்தசுவாமி கோவில்



கந்தரோடை



மன்னார்



பரந்தன்



ஊரெழு



சிப்பியாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தில்...

திகதி தனது நண்பன் ஒருவருடன் மகா கச்சகொடி குளத்திற்கு நீராடச் சென்ற போது கால் தவறி குளத்திற்குள் விழுந்துள்ளார்.

இதனையடுத்து ஊர் மக்கள் குறித்த இளைஞனைத் தேடியதுடன் மாமடு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

எனினும் மூன்று நாட்களாக இளைஞன் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த இளைஞனின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. (ம)

## நெடுந்தீவி...

நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ம-33)

## உயர்தரப்...

இதன்படி, உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 30, டிசம்பர் 2, 3ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது.

நாட்டில் நிலவும் மோசமான கால நிலை காரணமாக 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று தினங்களுக்கு உயர்தரப் பரீட்சையை நடத்துவதில்லை என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

சீரற்ற காலநிலை தணிந்த போதிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட ஆறு நாட்களுக்கான உயர்தரப் பரீட்சை பாடங்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து டிசம்பர் 21 முதல் டிசம்பர் 31 வரை நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(ம)

## மாவீரர்...

நினைவாலயம் நேற்று முன்தினம் விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த 1985ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த நிலையில் அவரது நினைவாலயம் மேற்குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாவீரர் நாளான நேற்று முன்தினம் பி.ப 06.05 மணிக்கு குறித்த நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுக் காலை குறித்த நினைவாலயம் சேதப்படுத்தப்பட்டிருந்தது. (ம)

## வைத்தியசாலை...

பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, வைத்தியர் ஆர்.முரளிஸ்வரன் மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியர் ஜி.சுகுணன் மட்டக்களப்பு கல்முனை வடக்கு வைத்திய சாலையின் பணிப்பாளராகவும், வைத்தியர் டி.வினோதன் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், வைத்தியர் கே.ஜி.சீ.வை.எஸ்.வீ.வீரக்கோன் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், திருமதி பி.எஸ்.என்.விமலரட்ண கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், என்.சீ.டி. ஆரியரட்ண வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளராகவும், டபிள்யூ.ஏ.நி. நிச்சங்க அம்பாறை மாவட்டப்பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், எம்.எச்.எம்.அசாத் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராகவும், டபிள்யூ.கே.சீ.பீ.வீரவத்த கிளிநொச்சிப் பொது வைத்தியசாலைப் பணிப்பாளராகவும், டி.எம்.ஏ.கே. திசாநாயக்க கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், எஸ்.என்.வீ. பிரேமதாஸ முல்லைத்தீவு பொது வைத்தியசாலைப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2ஆம் திகதிக்குப் பின் அமுலுக்கு வரும் வகையில் இவ் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-250)

## உரமானிய...

தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய மற்றும் கால்நடைப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)

## யாழில் இராணு...

தில் 2700 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. விடுவிக்க படுமா?

**பதில்** - காணி விடுவிப்புத்தொடர்பில் நாம் சிந்தித்து வருகின்றோம். எதிர்காலத்தில் நாங்கள் சரியான மதிப்பீட்டைச் செய்வோம், அது குறித்து முடிவு செய்வோம் .

**கேள்வி** - தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஐந்து அல்லது ஆறு வருடங்களே அதன் கால எல்லையாக உள்ளது. குறித்த காலத்தில் மக்களின் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப் படுமா?

**பதில்** - "ஆம் அதனைத்தான் நான் கூறுகின்றேன்.நாங்கள் மீண்டும் காணி விடுவிப்புத் தொடர்பில் மதிப்பீடு செய்துள்ளோம், பாதுகாப்பு மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

நிச்சயமாக நேர்மறையாக இந்த விடயத்தில் ஈடுபடுவோம், ஏற்கெனவே சில வீதிகளை நாம் விடுவித்துள்ளோம். அதுடன் இந்த நாட்டு மக்களின் நலன் குறித்து நாம் எப்பொழுதும் கரிசனையுடையவர்களாகவே உள்ளோம்" என்றார். (ம)

## வன்...

யுடன் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

இந்நிலையில், நினைவுகூரல் தொடர்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, மேலும் கூறியிருப்பதாவது,

நாமனைவரும் ஒற்றுமையானதும், அமைதியானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்திப் பணியாற்றும் போது, பல வருடங்களாக நீடித்த மிகமோசமான யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சார்ந்த நினைவுகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

அதற்கமைய கடந்தகாலக் கருத்தியலின் விளைவாக சிலரது பாதை திசை மாறியிருந்தாலும், அவர்கள் உட்பட சகல அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு குடும்பங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். இதுவோர் மனித உரிமை என்பதுடன், கடந்த காலக் காயங்களை ஆற்றுவதற்குரிய மிகமுக்கிய நகர்வாகும்.

இருப்பினும் இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன்தலைவரையோ போற்றுவது நாம் முன்நோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது. மாறாக அத்தகைய நடவடிக்கைகள் கடந்தகால வலிகளையும், தேவையற்ற பதற்றங்களையும் தோற்றுவிப்பதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை நலிவடையச்செய்யக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றன. வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீள முடியாது. மாறாக புரிந்துணர்வு, சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாகவே அதனை அடைந்துகொள்ள முடியும் என்றார். (ம)


மஹஜன சம்பத
திகதி 2024.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 5669
E 1 0 1 6 5 6
அத சம்பத E 1 6 5 6
சீட்டிழுப்பு இலக்கம் 244
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1699
Y 08 22 37 55 Y
Double Chance 38682

மெகா பவர்
திகதி 28/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2017
M 05 04 12 17 33
Double Chance 146351

லக்கி 7 VIP
திகதி 2024.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 0495
B 4 4 7 2 9 3 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3911
சீட்டிழுப்பு திகதி 28.11.2024
E 31 41 64 78
E 185754

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 0978
விருச்சிகம் 33 55 60 61 விருச்சிகம்
099183 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
28.11.2024 வெற்றி வாரம் 377
V 7 0 5 9 0 7
49585
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,305,110.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2643
சீட்டிழுப்பு திகதி 2024.11.28 தினம் வியாழக்கிழமை
19 63 66 72 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,908,203.20
DLB

சனிதா
28.11.2024 வெற்றி வாரம் 4804
19 25 34 50 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,632,099.20
88253
DLB

சசிரி
வெற்றி வாரம் 566
28.11.2024 வியாழக்கிழமை
32 47 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4355
சீட்டிழுப்பு திகதி 28.11.2024 தினம் வியாழக்கிழமை
28 35 38 54 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,086,612.00
124488
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 28 20 22 38 72
1819
28.11.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,625,114.20
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2469
சீட்டிழுப்பு திகதி : 2024.11.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
06 27 28 74 G
342932
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலர் உணவுப் பொருட்கள்

அனர்த்த கால நிவாரணத்திற்காக உலர் உணவுப் பொதிகளை வழங்க விரும்புவோர் எம்மிடம் சிறந்த விலையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

**Happy Supermarket**

உரும்பிராய்

077 350 4700

(584)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All counries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1676)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
077 544 8503
(C-1673)

## வீடு வாடகைக்குண்டு

கொக்குவில் முதலி கோயிலடியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
078 890 9013
072 445 5458
(2630)


## மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றங்களில் 2025ம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்.
2. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - மல்லாகம்.
3. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - சாவகச்சேரி.
4. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை.

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா. 100.00ம் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா. 5000.00ம் செலுத்தி 13.12.2024ம் திகதி பி.ப 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 13.12.2024 பி.ப 3.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 4.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சிற்றுண்டிச்சாலை சேவையினை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**ஒப்பமிடப்பட்டுள்ளது.**
**மேல்நீதிமன்ற நீதிபதி,**
**மேல் நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-1675)

## மணிவிழா வாழ்த்து




**திருமதி புஸ்பராணி அரிவாசுதேவன்**


**சிரேஸ்ட ஆசிரியர் ( SLTS - I )**

ஆசிரியப் பணியே அரும் பணி என கொண்டு ஆரம்பக் கல்வியை ஆர்வமுடன் கற்பித்து அகவை அறுபதில் 36 வருட சேவையை இன்று (29.11.2024) பூர்த்தி செய்யும் எமது ஆசிரியர் திருமதி புஸ்பராணி அரிவாசுதேவன் அவர்களை தம்து ஓய்வுக் காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(2632)

**வாழ்த்துவோர் :**
**யா/வண்ணை நாவலர்மகா வித்.**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

# மரண அறிவித்தல்



மலர்வு 04.05.1940

உதிர்வு 28.11.2024

## ஆறுமுகம் கனகசிங்கம்

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசிங்கம் அவர்கள் இன்று (28.11.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - பார்வதி தம்பதியினரின் மருமகனும், இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், வேழவேந்தன், செந்தூரன் (கனடா), சுகந்தன் (உரிமையாளர், Venkadeswara Agro Industry (Pvt) Ltd. & Venkadeswara Express), சுகந்தினி, அருண் (பிரான்ஸ்), தவலோஜினி (பிரதி ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, சர்வாம்பிகை (கனடா), பாமினி, ஸ்ரீசுகந்தராஜா (கனடா), பவித்திரா (பிரான்ஸ்), நிரோஜன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் கோப்பாய் மற்றும் வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயில்வாகனம், காலஞ்சென்ற இராசம்மா, தம்பிராஜா மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும். மகிந்தன், சயந்தன், விஹாசினி, அஷ்வியா, அபினேஷ், சமிதா, அபிஷேக், விடின், ஸ்ரீஅஞ்சலா, ஸ்ரீஅஞ்சலோ, அஜ்வி, அத்விக், பிரவிந், மற்றும் கேசரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வேழவேந்தன் : 077 712 2590
சுகந்தன் : 077 774 3578
தவலோஜினி : 077 290 3314
அருண் : +33 605622237
செந்தூரன் : +1(416) 8233092

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

(2631)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ்-பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.